038

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

சிறப்புக் கல்விமாணி விசேட தேவைகள் சார் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 5

**SNU5239/ESU3139 – விசேட தேவைகள் சார் கல்வியில் தற்காலப் போக்குகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 29.10.2023 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி – I

1. விசேட தேவைகள் கல்வியில் உலகலாவிய வளர்ந்து வரும் **ஐந்து** (05) செல்நெறிகளைக் குறிப்பிடுக.
2. இலங்கையில் விசேட தேவையுடைய கல்வியின் சமகாலப் பிரச்சினைகளுக்கு **இரண்டு** (02) உதாரணங்களை முன்வைக்குக.
3. இயலாமையுடைய தனிநபருக்கான கல்விச் சட்டத்துடன் (IDEA) கூடிய **ஆறு** (06) கொள்கைகளைப் பட்டியலிடுங்கள்.
4. ஒரு (01) உதாரணத்தை மேற்கோள் காட்டி, உள்ளடங்கற் கல்வியில் அணி அணுகுமுறை (Team Approach) யாது என்பதை விளக்குக.
5. உள்ளடங்கற் கல்வி முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு **ஐந்து** (05) நிறுவனம்சார் உத்திகளை பட்டியலிடவும்.
6. முறைசாரா கல்வியானது விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதற்கு **ஐந்து** (05) விடயங்களைக் குறிப்பிடுக.
7. இலங்கையில் ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடங்கற் கல்வி நடைமுறையில் இருந்தாலும், விசேட பாடசாலைகள் நடைமுறையின் அவசியத்தை விளக்கவும்.
8. ஒருங்கிணைந்த கல்வி முறையின் நான்கு (04) நிலைகளை விளக்கவும்.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9\.

அ. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான மாநாட்டின் (the Convention on the Elimination of All Forms of Discrimination against Women) கொள்கைகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

ஆ. இயலாமையுடையோருக்கான ஐக்கிய நாடுகளின் உலகளாவிய திட்டம் எவ்வாறு இயலாமை நபர்களின் உரிமைகள் மற்றும் தகுதியை மேம்படுத்துகிறது மற்றும் பாதுகாக்கிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

இ. சர்வதேச மற்றும் தேசிய மாநாடுகள் எந்த அளவிற்கு விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வியை உறுதி செய்கின்றன என்பதை விளக்குங்கள்.

**(09 புள்ளிகள்)**

10\.

அ. கல்வி மீதான தாராளமயவாதிகளின் முன்னோக்குகளை உதாரணங்களை மேற்கோள் காட்டி சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. "தனிமனிதனின் வளர்ச்சிக்கான கல்வியின் செயல்பாடுகளில் சமூக நகர்விற்காக கல்வி மிகவும் குறிப்பிடத்தக்க படியாகும்"
மேலே குறிப்பிட்டுள்ள கூற்றினை நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

இ. இலங்கைக் கல்வி முறையில் சமூக நீதிக்கான கல்வியைப் பெறுவதில் இயலாமைகள் உள்ள பிள்ளைகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

**(09 புள்ளிகள்)**

11\. அ. "கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் நடைபெறுவதால், கல்வி வெவ்வேறு சூழல்களில் நடைபெறுகிறது"
மனித வாழ்நாள் முழுவதும் நடைபெறும் மூன்று (03) கல்வி வகைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ஆ. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான முறையில் மற்றும் முறைசார கல்வி முறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

இ. தற்போதைய கல்வி முறைகளில் நிகழ்நிலைக் (online) கற்றல் ஒரு வளர்ந்து வரும் போக்காகும். நிகழ்நிலைக் கற்றல் நடைமுறையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12.

அ. விசேட தேவைகள் சார் கல்வி மற்றும் அதன் வளர்ச்சி வரலாற்றின் "பிரித்து வைத்தல் கட்டம்" (the separation phase) மற்றும் "பாதுகாக்கப்பட்ட கட்டம்" (the care taking phase) ஆகிய **இரண்டு** (02) கட்டங்களைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ஆ. இலங்கைக் கல்வி முறையில் விசேட கல்வி அலகு முறை எவ்வாறு செயற்படுகின்றது என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

இ. இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான உள்ளடங்கற் கல்வி முறையை மேம்படுத்துவதற்கு ஒரு விசேட கல்வி அலகில் உள்ள விசேட ஆசிரியர் எவ்வாறு ஆதரவளிக்கிறார் என்பதை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

13.

அ. இலங்கையில் இயலாமைகள் உள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த சர்வதேச பிரகடனங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதைச் சுருக்கமாக விளக்கவும்.

**(05 புள்ளிகள்)**

ஆ. இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை மேம்படுத்துவதற்கு நாம் எவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

இ. இலங்கையின் பொருளாதார நெருக்கடி இயலாமைகளுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் மேம்பாட்டை எவ்வாறு பாதிக்கும் என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்கவும்.

**(09 புள்ளிகள்)**

14. அ. "விசேட சூழ்நிலைகளில் வைக்கப்பட்டுள்ள குழந்தைகள்" என்ற பதத்தை விளக்கி, விசேட சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ள குறைந்தபட்சம் **ஐந்து** (05) வகையான குழந்தைகளைக் குறிப்பிடவும்.

**(05 புள்ளிகள்)**

ஆ. குழந்தைகளின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் சமவாயம் (CRC) இயலாமைகளுடைய குழந்தையின் உரிமைகளை எவ்வாறு விளக்குகிறது என்பதை ஆராயுங்கள்.

**(06 புள்ளிகள்)**

இ. இலங்கையில் இயலாமைகளுடைய குழந்தைகள் தங்கள் உரிமைகள் தொடர்பாக அறிவு, புரிதல் மற்றும் சேவைகளைப் பெறுவதில் என்ன சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை விளக்குக.

**(09 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -